**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

**OS. No. 121/2023 நாள் 15.10.2024**

**PW 2 – பார்வதி க/பெ.மாரிமுத்து**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது சகோதர கேசவன் மருத்துவமனையில் இருக்கிறார் என்று எனக்கு தகவல் கொடுத்தது அக்கா ஜெயலட்சுமி மற்றும் அவர் மகள் சிவரஞ்சனி. அந்த தகவல் 18 ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு மேல் வந்தது. நான் அவரை மருத்துவமனையில் 20ம் தேதி காலை செய்து பார்த்தேன். நான் போனபோது அங்கு சின்ன அக்கா, அவரது மகள், மற்றும் கணவர் ஆகியோர் இருந்தார்கள். நிரூபன வாக்குமூலத்தில் இந்த தகவலை சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 18ம் தேதியிலுருந்து 4ம் நாள் அவர் இறந்துபோனார். நான் 20ம் தேதி சென்று பார்த்துவிட்டு மாலை திரும்பிவிட்டேன். பிறகு அவர் இறந்துபோன தகவலை கேட்டு அதன்பிறகு சென்று பார்த்தேன். உமாராணியும் அவரது கணவர் மற்றும் அவரது மகள் எனது சகோதரரை பார்த்துக்கொள்ளவில்லை என்றும் பாலச்சந்தரும் அவரது மனைவியும் தான் எனது சகோதரரை பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்தபிறகு எனது சகோதரர் கேசவனுடன் நானும், அக்கா தங்கைகள் 4 பேரும் சேர்ந்து பாகப்பிரிவினை கோரி தஞ்சாவூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.92/199 என்ற வழக்கு போட்டோம். எனது அம்மா மற்றும் எனது தம்பி பாலச்சந்தருக்கு எதிராக அந்த வழக்கை தாக்கல் செய்தோம். அதில் இந்த வழக்கின் 4ம் வாதி அந்த வழக்கில் 3ம் பிரதிவாதியாக இருந்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபிறகு நான் எனது பங்கிற்கு உரிய தொகையை வாங்கிவிட்டு பத்திரம் எழுதிக்கொடுத்தேன். அதற்கு பிறகு அந்த வழக்கு சொத்திற்கான விடுதலை பத்திரத்தை எழுதிக்கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ம் வாதி உமாராணி 05.11.2003ம் தேதி தனக்குரிய பங்கை வாங்கிக்கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 4ம் வாதி வசந்தகுமாரி 26.12.2008ல் தனக்குரிய பங்கை வாங்கிக்கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் இந்த வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதே இறந்துவிட்டார். 4 வாதிகள், பிரதிவாதி, இறந்துபோன கேசவனை தவிர என் அம்மாவுக்கு வேறு யாரும் வாரிசு இல்லை. என் அம்மா இறந்தபிறது கேசவன் எங்கள் பங்கை விடுதலை பத்திரத்திரம் மூலம் பெற்று 05.3.2016ல் இறுதிநிலை தீர்ப்பாணை அவர் பெயரில் பெற்றார். அதில் ஒரு பங்கு பாலச்சந்தருக்கு உரியது. அதன்பிறகு கேசவனும் பாலச்சந்தரும் அந்த சொத்தில் இருந்தார்களா என்றால் இல்லை கேசவன் மட்டும் தான் இருந்தார். எனது அம்மா பாலச்சந்திரடம் இருந்து பின்னர் இறந்துபோனார். எனது பங்கை எழுதிக்கொடுத்தபிறகு கேசவன்

18.02.2020ல் விபத்தில் இறந்துபோனார். அவரும் அவரது உடைமைகளும் வழக்கிடை சொத்தில் தான் இருந்தது. வழக்கு சொத்துக்குரிய ஆவணங்கள் அனைத்தும் கேசவனிடம் தான் இருந்தது. கேசவன் இறந்தபிறகு காரியம் செய்யும் போது சொத்து பற்றி எதுவும் பேசவில்லை. அதன்பிறகும் சொத்தை யார் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக பேசவில்லை. கேசவனுக்கு திருமணம் ஆகவில்லை. தாவா சொத்தில் 5/6 ல் பங்கு கேசவனிடமும் 1/6 பங்கு பாலச்சந்தரிடமும் இருக்கிறது என்றால் சரிதான். பாகப்பிரிவினை கோரி கேசவனுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்தோம். கேசவனுடன் ஒத்துப்போனதால் அந்த வழக்கு தீர்ப்பானது. அதற்குபிறகு நாங்கள் சகோதரர்கள் தற்போது தான் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு கையெழுத்தை அக்கா வீட்டில் வைத்து போட்டேன். பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை. என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை நான் எங்கே வைத்து போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லவில்லை என்றும் என் சகோதரி உமாராணி தயார் செய்து என்னிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரியல்ல. எனது சகோதரர் இறந்தபிறகு சொத்தை யார் எடுப்பது என்று பேசி முடிவு செய்தோம். தஞ்சாவூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சேகவனுக்கு வாரிசு என்று சொல்லி அ.வ.எண்.166/2021 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் இல்லை. நான், எனது சகோதரிகள் ஜெயலெட்சுமி, வசந்தகுமாரி, பாலச்சந்தர் ஆகியோர் சேர்ந்து உமாராணிக்கு எதிராகவும் தாசில்தாருக்கு எதிராகவும் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் இல்லை. அந்த வழக்கில் பெண்களுக்கு உரிமை வராது என்றும் வழக்கிடை சொத்துக்கான பங்கை வாங்கிவிட்டோம் என்று நாங்கள் திருமணமாகி கணவர் வீட்டில் வசித்துவருவதால் பங்கு கிடையாது என்று சொல்லி திரும்பப்பெறப்பட்டது என்றால் சரியல்ல. எனது சகோதரர் இறப்பதற்கு முன்பே தன்னுடைய ஆவணங்கள் அனைத்தையும் சகோதரி உமராணியிடம் ரூ.2,00,000/- கடன் வாங்கியதால் கொடுத்துள்ளதாக என்னிடம் சொன்னார். அதைப்பற்றி என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வழக்குரை தாக்கல் செய்தபோதும் மேற்கண்டவாறு சொல்லியுள்ளேன். ரூ.2,00,000கடன் வாங்கியதற்கு உமாராணி எழுத்துபூர்வமாக கேசவனிடமிருந்து ஏதேனும் எழுதி வாங்கினாரா என்றால் தெரியாது. வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் இதுபற்றி சொல்லவில்லை என்றும் இந்த பொருள்கள் மற்றும் ஆவணங்களை அனைத்தையும் உமாராணி அவரது வீட்டில் இருந்து எடுத்துச்சென்றுள்ளார் என்றால் சரியல்ல. உமாராணிக்கும் சொத்தில் பாகத்திற்கான பங்கை கொடுத்துவிட்டு தான் விடுதலை பத்திரம் எழுதி வாங்கினார் என்றால் சரிதான். ஜெயலெட்சுமி மற்றும்

எனக்கும் சொத்தில் பாகத்திற்கான பங்கை கொடுத்துவிட்டு தான் விடுதலை பத்திரம் எழுதி வாங்கினார் என்றால் சரிதான். கேசவனுக்கு திருமணம் ஆகவில்லை என்றும் அவர் இறக்கும் வரை டிரைவராகவும் எல்க்டிரீசியனாகவும் இருந்து நன்றாக சம்பாதித்தார் என்றும் அவர் எந்தவிதமான கடனும் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் பத்திரங்களை எடுத்துக்கொண்டு பொய்யாக காரணம் சொல்கிறோம் என்றால் சரியல்ல. நானும் எனது சகோதரிகளும் வாரிசுகள் என்று தாசில்தாரிடம் மனுகொடுத்தபோது அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுவை திருப்பியதன் காரணத்தால் பிரதிவாதி தஞ்சாவூர் கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அவஎண்.166/2021 என்ற வழக்கை தாக்கல் செய்தார். அந்த மனு தாக்கல் செய்த பிரதிவாதி என்னிடம் எதுவும் கூறவில்லை என்றும் அந்த வழக்கு 24.11.2022ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாலச்சந்தர் கேசவனுக்கு தான் மட்டுமே வாரிசு என்று விளம்புகை செய்யக்கோரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில அவஎண்.123/2023 என்ற வழக்கினை எங்களுக்கு எதிராக தாக்கல் செய்தார். அதில் நான் கட்சியாடினேன். என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.123/2023 வழக்கிற்கான எதிருரையில் உள்ள கையெழுத்துக்களில் என்னுடையது கையெழுத்து இல்லை. வழக்கு சொத்தில் தற்போது பாலச்சந்தர் தான் வசிக்கிறார். நாங்கள் எல்லோரும் திருமணமாகி தனித்தனியாக இருக்கிறோம். ஏற்கனவே எங்கள் பாகத்திற்கான தொகையை கேசவனிடம் வாங்கிவிட்டோம். இந்த வழக்கிடை சொத்தில் நாங்கள் கூட்டுஉரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு எவ்வளவு மதிப்பு என்று தெரியாது. நீதிமன்ற கட்டணத்தை குறைவாக கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் எங்களுக்கு எதிராக போட்ட வழக்கு நடந்துகொண்டிருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி வழக்கிடை சொத்தில் தான் குடியிருக்கிறார் என்றும் அவரிடம் போய் பாகம் கேட்டேனா என்றால் இல்லை. நிரூபன வாக்குமூலத்தில் எங்களுக்கு உரிய 1/5 பாக சொத்தை பிரித்துகொடுக்குமாறு சொல்லிவிட்டு பின்னர் நாங்கள் கேட்டதும் கொடுக்க மறுத்துவிட்டார் என்றும் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்குமாறு எங்களை கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக எனக்கும் சொத்தில் பங்கு உள்ளது என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் நான் தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை. என் சகோதரரிகள் அனைவரும் சேர்ந்து கொடுத்தார்களா என்று தெரியாது. வழக்கு சொத்தில் ஏற்கனவே வாதிகள் அனைவரும் அவரவர் பங்கிற்கான தொகையை இறந்துபோன கேசவனிடம் பெற்றுக்கொண்டுவிட்டோம் என்பதாலும் நாங்கள் அனைவரும் திருமணமாகி கணவர் வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருவதால் இந்த சொத்தில் பங்கு கேட்கும் உ ரிமை இல்லை என்றால் சரியல்ல. பாலச்சந்தருடன் சேர்ந்து உமாராணி எந்த வழக்கும் ஒன்றாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உமாராணிக்கும் பாலச்சந்தருக்கும்

**இடையே இருக்கும் பிரச்சனையில் எங்களை சேர்த்து பாலச்சந்தருக்கு எதிராக வேண்டுமென்றே வழக்கை உமாராணி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. திருமணமான பெண்களுக்கு சகோதரர் சொத்தில் பங்கு கேட்க உரிமை இல்லை என்றும் அதே போன்று ஏற்கனவே சொத்திற்குரிய பாகம் பிரித்துக்கொண்டபிறகு மறுபடியும்பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.